## இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம்...

அனுப்புநர்

சா. சுந்தர்,
த/பெ. ஆ. சங்கர்
34, குறிஞ்சி நகர்,
ஈரோடு - 638 001.

பெறுநர்

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஈரோடு.

மதிப்புக்குரிய அய்யா,

பொருள் : இருப்பிடச் சான்றிதழ் வேண்டுதல் சார்பாக.

வணக்கம். ஈரோடு, அரசு உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கின்றேன். 34, குறிஞ்சி நகர், ஈரோடு - 638 001 என்ற முகவரியில் பத்து ஆண்டுகளாக நாங்கள் வசித்து வருகின்றோம். அரசின் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க இருப்பிடச் சான்றிதழ் தேவைப்படுகின்றது. இத்துடன் குடும்ப அட்டை நகலும் ஆதார் அட்டை நகலும் இணைத்துள்ளேன். ஆகவே, எனக்கு இருப்பிடச் சான்றிதழ் வழங்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

இடம் : ஈரோடு
நாள் : 25.06.2020

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
சா. சுந்தர்.

உறைமேல் முகவரி:

| |
|---|
| பெறுநர்<br>உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>ஈரோடு. |



விடுநர்

ஊர்ப் பொதுமக்கள்,
கன்னேரிமந்தனை, தங்காடு ஓரநள்ளி,
நீலகிரி மாவட்டம் - 643 003.

பெறுநர்

இயக்குநர்,
பொது நூலகத்துறை,
சென்னை - 600 002.

ஐயா,

பொருள் : நூலகம் அமைத்துத் தர வேண்டுதல் சார்பு.

எங்கள் ஊர் கன்னேரிமந்தனை. இவ்வூரில் மூவாயிரம் பேர் வாழ்கிறோம். ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட படித்த இளைஞர்கள் உள்ளோம். அன்றாடம் செய்திகளை அறிந்துகொள்ளவும், பொது அறிவைப் பெருக்கிக்கொள்ளவும், பயனுள்ள வகையில் பொழுதைக் கழிக்கவும், நூலகம் ஒன்றை எங்கள் ஊரில் அமைத்துத்தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கன்னேரிமந்தனை,
17. 01. 2011

தங்கள் உண்மையுள்ள,
கன்னேரிமந்தனை
ஊர்ப் பொதுமக்கள்.

உறைமேல் முகவரி

பெறுநர்

இயக்குநர்,
பொது நூலகத்துறை,
சென்னை - 600 002.